தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, தை 11, திருவள்ளுவர் ஆண்டு–2048

2017 ஜனவரி 24, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்து இவ்வுலகு.”

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் மறைந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

1. இரங்கற்குறிப்புகள்

(அ) முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஏ.சி. நரசிம்மன் அவர்கள் 5-5-2016 அன்றும், திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் 13-10-2016 அன்றும், திரு. க. கண்ணையன் அவர்கள் 19-11-2016 அன்றும், திரு. கோ.சி. மணி அவர்கள் 2-12-2016 அன்றும், திரு. ஆ. பாலுச்சாமி அவர்கள் 11-12-2016 அன்றும் மற்றும் திரு. க. பாரமலை அவர்கள் 21-1-2017 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஏ.சி. நரசிம்மன் அவர்கள் 1967 முதல் 1971 வரையிலும் மற்றும் 1971 முதல் 1976 வரையிலும் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் அவர்கள் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 வரை ஆலங்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. க. கண்ணையன் அவர்கள் 1989 முதல் 1991 வரையிலும் மற்றும் 1996 முதல் 2001 வரையிலும் தொட்டியம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. கோ.சி. மணி அவர்கள் 1962 முதல் 1967 வரை ஆடுதுறை தொகுதியிலிருந்தும், 1989 முதல் 1991 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும், 2001 முதல் 2006 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் கும்பகோணம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1968 முதல் 1974 வரையிலும் மற்றும் 1974 முதல் 1980 வரையிலும் சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், 1989 முதல் 1991 வரையிலும், 1996 முதல் 2001 வரையிலும் மற்றும் 2006 முதல் 2011 வரையிலும் அமைச்சராகவும் பணியாற்றினார்கள்.

திரு. ஆ. பாலுச்சாமி அவர்கள் 1985 முதல் 1988 வரை பரமக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

திரு. க. பாரமலை அவர்கள் 1980 முதல் 1984 வரையிலும், 1985 முதல் 1988 வரையிலும் மற்றும் 2001 முதல் 2006 வரையிலும் மானாமதுரை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)